# 1சாமுவேல்

சாமுவேல் ஒரு தீர்க்கதரிசியாவார், அத்துடன் அவரே கடைசி நியாயாதிபதியுமாவார். இவரே முதலாவது இராஜாவை அபிஷேகம் செய்தவருமாவார். சவுல் உடல் அழகிலும், கெம்பீரமுள்ளவராயிருந்த போதிலும், அவரது கர்த்தரிடத்தில் கொண்டுள்ள வித்தியாசமான மனப்பாங்கினால் அவரது இராஜ்ஜியமானது அவரது குடும்பத்திடமிருந்து பறித்துக் கொள்ளப்பட்டது. அவரது இடத்திற்கு தெரிவு செய்யப்பட்ட இராஜாவாக தாவீது சாமுவேலினால் அபிஷேகம் பண்ணப்பட்டார். சவுல் தாவீதின் மீது எரிச்சலடைந்தபடியால், அவர் காடுகளில் ஒளிந்து வாழ வேண்டியும் ஏற்பட்டது. ஆனால் கர்த்தருடைய பாதுகாக்கும் கரம் தாவீதுடன் கூட இருந்தது. ஆனால் சவுலின் மீதும் அவரது குடும்பத்தின் மீதும் கர்த்தரின் நியாயந்தீர்க்கும் கரம் இருந்தது. முட்டாள்தனமாக சவுல் அன்னிய தெய்வங்களிடம் விசாரித்ததின் நிமித்தம், அவருக்கு எதிராக கூறப்பட்ட அழிவை அவரது காதுகள் கேட்டது. தீர்க்கதரிசியின் வார்த்தைகள் உண்மையானவை, சவுலும் அவனதும் மகனும் அடுத்த நாளே கொல்லப்பட்டார்கள். கர்த்தரை நேசித்து, சார்ந்து வாழாத தலைவர்களும் மக்களும் இறுதியில் தோற்றுப்போவார்கள் என்பதை இப்புத்தகம் கூறுகின்றது.

**எழுதியவர்:-** சாமுவேல் புத்தகத்தை சாமுவேல், காத், நாத்தான் என்பவர்கள் எழுதியதாக நம்பப்படுகின்றது. சாமுவேல் முதல் இருபத்திநான்கு அதிகாரங்களையும் எழுதினார், தாவீதின் கூட்டாளியாகிய காத் (1.சாமு.22.5) மிகுதிக் கதையை எழுதினார், நாத்தன் மிகுதியை எழுதிமுடித்தார்,( 1 நாளா.29;29)

**முதலாம் சாமுவேலுக்கான திறவு கோல்கள்.**

***திறவுகோல் வார்த்தை;-*** ***கைமாற்றம்***

***திறவு கோல் வசனங்கள்*** *(13:14; 15:22)–*

**1சாமு 13:14** இப்போதோ உம்முடைய இராஜ்யபாரம் நிலைநிற்காது; கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்ற ஒரு மனுஷனைத் தமக்குத் தேடி, அவனைக் கர்த்தர் தம்முடைய ஜனங்கள் மேல் தலைவனாயிருக்கக் கட்டளையிட்டார்; கர்த்தர் உமக்கு விதித்த கட்டளையை நீர் கைக்கொள்ளவில்லையே என்று சொன்னான்.

**(1சாமு 15:22** அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்.

***திறவுகோல் அதிகாரம்*** *(15)*– 1.சாமுவேல் 15ம் அதிகாரத்தில், சவுலிடமிருந்த அரசாட்சி தாவீற்கு மாற்றப்படும் நிகழ்ச்சியைக் கூறுகின்றது. 1.சாமுவேல் புத்தகத்தில் மூன்று விதமான மாறுதல்கள் இடம்பெறுகின்றன. பாவத்தின் காரணமாக ஒருவரிடமிருந்த ஆசீர்வாதங்களை எடுத்து மற்றவருக்கு கர்த்தர் கொடுக்கின்றார்."நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்". **1சாமு 15:23** ;

**திறவுகோல் மனிதர்கள்**;- சாமுவேல், சவுல், தாவீது

## 1.சாமுவேல் புத்தகத்தின் சுருக்கம்

**I. சாமுவேலிற்கூடான புதுப்பித்தல் 1:1-7:17.**

**A. சாமுவேலுடைய பிறப்பும்,குழந்தைப்பருவமும் (1:1-2:36).**

1. *சாமுவேலுடைய பிறப்பும்,கர்த்தருக்கு ஒப்புவித்தலும்* (1:1-2:11).
எல்கானா ஆண்டுதோறும் சீலோவுக்கு சென்று ஆண்டவரை தொழுது கொள்ளும் வளக்கமுடையவராயிருந்தார்.
எல்கானாவுனுடைய காலத்தில், அவனுடைய குழந்தையில்லாத மனைவியாகிய அன்னாள், தன்னுடைய கர்ப்பத்தை கர்த்தர் திறந்தால், முதலாவது பிள்ளையை கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பதாக பொருத்தனை பண்ணினாள். அன்னாளின் வாயை கவனித்த ஏலி உதடுகள் அசைகின்றன சத்தம் வரவில்லை ஆகவே இவள் வெறித்திருக்கிறாள் என்றென்னி அவளை

கண்டித்தான். தாழ்மையாக பதில் கூறினாள் அன்னாள். (1:11).இந்த ஜெபமானது கேட்கப்பட்டது. அன்னாளுக்கு கர்த்தர் ஆண் பிள்ளையைக் கொடுத்தார், அவனுக்கு சாமுவேல் என்று பெயரிடப்பட்டது. சாமுவேல், மூன்றாவது வயதில் பால் மறந்தவுடன், ஏலி என்னும் பிரதான ஆசாரியனுடைய வாசஸ்தலமாகிய சீலோவிற்கு கொண்டுவரப்பட்டான். பொருத்தனையை நிறைவேற்றவரும் போது தன்னுடைய மூத்த மகனுடன் சர்வாங்கபலிக்காக மூன்று காளையையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சைரசத்தையும் எடுத்துவந்தாள். சாமுவேல் கர்த்தருடைய ஆலயத்தில் வாழ்நாள் முழுவதும் கர்த்தருக்கு சேவை செய்தான். அன்னாளின் ஜெபமும்,பாடலும் மனமார நன்றி சொல்வதாய் அமைந்தது. லூக்கா 1:46-56 ல் மரியாள் பாடியதுபோல் அன்னாளும் பாடினாள். 2:6 கிறிஸ்த்துவின் உயிர்த்தெழுதலை வெளிப்படுத்தி நிற்கிறது.

2. ***சாமுவேலுடைய வளர்ச்சியும், ஏலியின் பிள்ளைகளுடைய சீரழிவும்.*** (2:12-36).

ஏலியினுடைய இரண்டு பிள்ளைகள், ஆராதனை செய்யும் வழக்கத்தை கைக் கொண்டுவந்தார்கள், ஆனால் அவர்கள் "கெட்ட பிள்ளைகளாய்" இருந்தார்கள். (12). அவர்கள் ஆராதனை முறைமைகளைச் செய்து வந்தபோதிலும், அவர்களின் ஒழுக்கச் சீர்கேடு அவமானமுள்ளதாய் இருந்தது, இந்த வாலிபர்களுடன் வளர்ந்து வந்த சாமுவேலுடைய வாழ்க்கை இவர்களைவிட வித்தியாசமாக நன்றாகவிருந்தது. அன்னாளின் ஜெபம் சாமுவேலைப் பாதுகாத்தது. 2:6 கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை குறிக்கிறது.

**தீர்க்கதரிசனம் உரைக்கப்பட்டது.** (2:27-36. ஏலியின் பிள்ளைகளின் துணிகரமான பாவங்களை ஏலி கண்டிக்கவுமில்லை, விலக்கிவைக்கவுமில்லை. ஏலியினுடைய குடும்பத்தில் சாபம் வந்தது, ஆனால் தன்னுடைய இருதயத்திற்கும் சிந்தைக்கும் ஏற்ற பிரகாரமாய் கர்த்தர் ஒருவரை எழும்பப் பண்ணுவார்.2:30 கர்த்தரை கனம் பண்ணுபவர்களை கர்த்தர் கனம் பண்ணுவார்.

**B. சாமுவேலுடைய தீர்க்கதரிசன ஊழியம் ஆரம்பம்.(3:1-4:1).**

1. ***கர்த்தருடைய அழைப்பு (3:1-9).***

2. ***ஏலிக்கான கர்த்தருடைய வார்த்தை*** (3:10-18).சாமுவேலுடன் கர்த்தர் நேரடி யாகப் பேசும் போது, ஏலி குடும்பத்து எதிராக கூறிய தீர்க்கதரிசனம் உறுதிப்ப டுத்தப்பட்டது.(11).

3. ***இஸ்ரவேலர்கள் அனைவருக்கும் கர்த்தருடைய ஊழியம்***. (3:19-4:1).சாமுவேல் வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் போதே, அவர் கர்த்தருடைய தீர்க்கதரிசி என்பதை பரவலாக ஏற்றுக் கொண்டார்கள், அவருடைய வார்த்தை ஒன்றாவது வீணில்போகவில்லை.

**C. நியாயாதிபதியாக சாமுவேலுடைய ஊழியம்.(4:2-7:17).**

*1.* ***பெலஸ்தீனியர்களால் உடன்படிக்கைப் பெட்டி கைப்பற்றப்படல்***. *(4:2-11).*

பெலஸ்தீனியர்களுடனான யுத்தம் இரண்டு இடங்களில் நடைபெற்றது. ஆரம்பத்தோல்விக்குப் பிற்பாடு, இஸ்ரவேலர்கள் உடன்படிக்கைப் பெட்டியைக் கொண்டு வருவதற்காக சீலோவிற்குப் போனார்கள். இது ஆலயத்திலேயே இருக்கவேண்டியதாகும், ஆனால் மூட நம்பிக்கையுடன் யுத்தப்பிரதேசத்திற்கு கொண்டுவரப்பட்டது. இரண்டாம் யுத்ததில் மிகவும் மோசமான தோல்வியை இஸ்ரவேலர்கள் சந்தித்தார்கள், அத்துடன் உடன்படிக்கைப் பெட்டியும் கைப் பற்றப்பட்டது.

2. ***ஏலியின் மரணம்***.(4:12-22). ஏலியினுடைய இரண்டு கெட்ட குமாரரும் யுத்தக ளத்தில் மடிந்தார்கள். ஏலி இந்த சம்பவங்களைக் கேள்ளிப்பட்ட போது விழுந்து பிடரி முறிந்து செத்தார். நாற்பது வருடங்கள் இஸ்ரவேலை ஆண்ட இந்த மனிதனின் மரணமும், உடன்படிக்கைப் பெட்டிகைப்பற்றப்பட்டதும், இஸ்ரவேலர்களிடையே ஒழுக்கச் சீர்கேட்டைக் கொண்டுவந்தது. (21-22) பெலிஸ்தீனியர்களுடனான எதிர்ப்பையும் முடிவிற்கு கொண்டுவந்தது.

*3.* ***இஸ்ரவேலர்களால் உடன்படிக்கைப் பெட்டி மீட்கப்படல்*** *(5:1-7:1).*பழைய ஏற்பாட்டு மக்கள் தங்கள் வெற்றிகளை தங்களுடைய தெய்வம் எதிராளியினுடைய தெய்வத்தை வெற்றி கொண்டதாக வெற்றியைக் கொண்டாடினார்கள். பெலஸ்தீனியர்கள் கர்த்தர் இந்த யுத்தத்தில் தோற்றுப் போனால் என்று கருதியது மிகவும் தவறானதும் முட்டாள்தனமானதுமாகும்.. ஆனால் உடன்படிக்கைப் பெட்டிக்கு முன்பாக அவர்களுடைய தெய்வங்கள் முகங்குப்புற விழுந்து கிடப்பதையும், ஜனங்கள் நோய்களினாலும், கட்டிகளினாலும் வருத்தப்படுவதையும் கண்டார்கள். பயத்தின் மிகுதியால்

உடன்படிக்கைப் பெட்டியை பெலஸ்தீனியர்கள் இஸ்ரவேலர்களிடம் திரும்பக் கையளித்தார்கள்.

4. ***மனம்திரும்பும்படி சாமுவேலின் அழைப்பு*** (7:2-6). ஆப்பெக்கில் ஏற்பட்ட தோல்விகளுக்குப் பிற்பாடு இரண்டு தசாப்தங்களுக்குப் பின்பு, சாமுவேல் இஸ்ரவேலர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட தலைவரானார். அவர் ஜனங்களை புதிய தீர்மானங்களை எடுக்ககூடியதாக வழிநடத்தினார். (3-4).

5. ***பெலிஸ்தினியர்களின் தோல்வி*** (7:7-17).இஸ்ரவேலர்கள் அனைவரும் மிஸ்பாவில் உபவாசத்துடனும் திர்மானத்தினுடனும் கூடிய பொழுது, பொலஸ்தீனியர்கள் இஸ'ரவேலர்களின் ஒன்று கூடலைத் தடுக்கும் வண்ண மாக அவர்களைத் தாக்கினார்கள். கர்த்தர் இஸ்ரவேலர்களுடன் இருந்து யுத்தம் செய்தபடியால் பெலிஸ்தினியர்கள் தோல்வியைக் கண்டார்கள். (10-12). 7:12 யுத்தத்தில் வெற்றி கொண்டதால், சாமுவேல் ஒரு கல்லை எடுத்து நிறுத்தி கர்த்தர் இம்மட்டும் உதவினார் என்று சொல்லி எபெனேசர் எனப் பெயர் வைத்தான்.

**II. சவுலின் ஆளுகை 8:1-15:35.**

**A. சவுல் அரசனாக்கப்படல்.(8:1-12:25).**

*1.* ***இஸ்ரவேலர்கள் இராஜாவுக்காக வேண்டுதல் செய்தல்.*** *(8:1-22).*சாமுவேல் வயது சென்றவனாகிய போது, இஸ்ரவேலர்கள் அவனிடம் வந்து இராஜா தேவை என்று அடம்பிடித்தார்கள். சாமுவேல் இதைத் தனக்கு ஏற்பட்ட அவமானமாக எண்ணினார், ஆனால் ஜனங்கள் உண்மையாகவே இஸ்ரவேலர்கள் தங்களை ஆளுகை செய்த கர்த்தரைத் தள்ளினார்கள். (7).புதிய இராஜா வரும்போது ஏற்படும் சீர்குலைவுகள் பற்றி சாமுவேல் இஸ்ரவேலர்களுக்கு விளங்கப்படுத்தினார், (10-18), ஆனால் ஜனங்கள் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.

2. ***சவுல் தெரிவு செய்யப்படுதலும் இராஜாவாக அபிஷேகம் செய்யப்படுதலும்***. (9:1-12:25).

தொலைந்துபோன கழுதைகளைத் தேடப் போனபொழுது சவுல் சாமுவேலைச் சந்திக்கின்றார். கர்த்தர் அவரைச் சாமுவேலுக்கு தெரிவு செய்யப்படும் இராஜாவாக அடையாளம் காட்டினார்.(9:16-17). தாழ்மையான சவுல், சாமுவேல் தன்னைக் கனப்படுத்தும் போது மிகவும் அதிர்ச்சியடைந்தார், அதன் பிற்பாடு

அவரை எண்ணெய் ஊற்றி அபிஷேகம் செய்தார்(9:18-10:1). சவுல் வீடு திரும்பி வீடு போகும் போது நடக்கும் சம்பவங்களை விபரமாகக் முன்பே கூறப்பட்டது. இது சாமுவேலுக்கூடாக கர்த்தர்தான் தன்னுடன் இராஜாவின் ஸ்தானத்தைக் குறித்துப் பேசினார் என்பதை உறுதிப்படுத்தியது. (10:2-13).

**'அப்பொழுது கர்த்தருடைய ஆவியானவர் சவுலுன்மீது இறங்கினார், அத்துடன் அவர் அவர்களுக்குள் தீர்க்கதரிசனமும் சொன்னார்"**

இச் சூழ்நிலையில் , சவுலானவர் பரிசுத்த ஆவியினால் தீர்க்கதரிசனம் சொன்னார். இஸ்ரவேலருடைய தலைவராகவும் அரசனாகவும் இருந்த போதிலும் சவுல் தீர்க்கதரிசிகளுடன் சேர்ந்து இயங்கவில்லை. அவர் அவர்களுடன் இயங்கியிருந்தால் தேசத்திற்கு அவரால் நன்றாக சேவை செய்திருக்க முடியும். இந்த நோக்கத்திற்காகவே கர்த்தர் சவுலுக்கு வரங்க ளைக் கொடுக்க விரும்பினார். (10:5-11)

சாமுவேலினால் சவுல் இராஜாவாக ஜனங்களுக்கு அறிமுகப்படுத்தப்பட்டார். 10:14-25). அம்மோனியர்கள் யாபேஸ் கில்காலை முற்றுகையிட்டபோது, சவுல் இஸ்ரவேலர்களை அழைத்துக் கொண்டு அதிகாலையில் எதிரியின் இருப்பிடத்தை தாக்கியழித்தான். (11:1-11). இதன் முழுவெற்றியும் சவுலுக்கு அவனது அலுவலகத்தை விஸ்தரிக்கச் செய்தது. (11:12-15).

**சாமுவேலுடைய பிரியாவிடைசெய்தி** (12:1-25).சாமுவேல் இப்பொழுது தலைமைப் பதவி முழுவதிலிமிருந்து விலகுவதற்று ஆயத்தப்படுகின்றார்.12.3 சாமுவேல் பண ஆசையற்று வாழ்ந்ததை எடுத்துகாட்டுகிறது. ஆனால் பிள்ளைகள் எதிர்மறையாக வாழ்ந்தார்கள். சாமுவேல் தன்னுடைய கடைசிப் பிரசங்கத்தில் இஸ்ரவேலர்கள் தேவனை விட்டு பின்வாங்கக்கூடாது என்று எச்சரித்தார்.

**B. சவுலுடைய யுத்தங்கள்.(13:1-14:52).**சவுல் இஸ்ரவேலில் இரண்டு வருடங்கள் அரசாண்டான். (13:1), ஆனால் அவர் தவறுகளை விடத் தொடங்கினார், அது அவரை கர்த்தரைவிட்டு புறம்பே தள்ளுவதற்கு ஏதுவாக அமைந்தது.

**பயம்(13:1-22).**

13:3 யோனத்தன் பெலிஸ்தியரை முறியடிக்கிறான் சவுல் இதை தேசம் எங்கும் எக்காளம் ஊதுவித்து பகிரங்கப்படுத்துகிறான். ஆரம்பத்தில் தாழ்மையாக இருந்த சவுல் நாட்கள் செல்ல செல்ல தாழ்மை குறைந்து

பெருமைக்கும் புகழுக்கும் அடிமைகொண்டான். சவுலுடைய ஆரம்ப காலத்தில் பெலிஸ்த்தர் பெரிய முற்றுகையைச் செய்தார்கள். தங்களுடன் யுத்தத்திற்கு வரும் பெலிஸ்தருடைய தோற்றத்தைக் கண்டு இஸ்ரவேலர்கள் பயந்தார்கள். கில்காலில் இருக்கும் சவுலுக்கு, வயதுசென்ற தீர்க்கதரிசி வந்து வெற்றிக்காக ஜெபம்பண்ணும் வரைக்கும் சாமுவேல் 7 நாள்கள் காத்திருக்கும்படிக்கு சொல்லியனுப்பினான்.

சாமூவேல் வராததை கண்டு சோர்ந்து போன சவுல், தானே பலியைச் செலுத்துவதற்குத் தீர்மானித்தான். பலி செலுத்துதல் ஆசாரியனல்லாத வேறொருவர் செலுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. பலி செலுத்துதல் முடிந்தகையோடு சாமுவேல் அங்கு சமூகமளித்தார், அவர் மிகுந்த கோபத்துடன் கர்த்தர் தம்முடைய பலிபீடத்திற்கு சாதாரண மனிதர்களை அங்கீகரிப்பதில்லை என்று கூறினார். சவுல் தவறையுணர்ந்து மன்னிப்பு கேட்காது சாக்குப்போக்கு சொன்னான். இதனால் கர்த்தர் தன் இதயத்துக்கு ஏற்ற ஒரு இராஜாவை உருவாக்குவேன், உம்முடைய இராஜ்ஜியம் நிலை நிற்காது என்றார்.13:21 ஆயுதம் எதுவுமில்லாமல் மண்வெட்டி கடப்பாரையுடன் பெலிஸ்தர்களை எதிர்த்து யுத்தம் செய்தனர் வெற்றியை கர்த்தர் கட்டளையிட்டார்.

**யுத்தம் வென்றது**. (14:1-52).

**C. சவுல் கர்த்தரால் தள்ளப்பட்டார்.(15:1-35)** சவுல் ராஜாவாகவிருந்து கீழ்ப்படியாமல் போனபடியால் கர்த்தர் அவரைத் தள்ளினார். பழைய நகரத்தை அழிக்கும்படி அனுப்பப்பட்டான், ஆனால் தங்களுக்கு நல்ல மிருகங்களைச் சேர்த்து வைப்பதற்கு சவுல் அனுமதி கொடுத்தார் பெறுமதியற்ற மிருகங்களைக் அழித்து விட்டார். சாமுவேல் அவரைச் சந்தித்து கர்த்தரின் நியாயத்தீர்ப்பை அறிவித்தார்.14:6 யோனத்தானின் விசுவாசம் வெளிப்பட்டது.

**III. சவுல் தள்ளப்படுதலும் தாவீது உயர்த்தப்படுதலும்.16:1-31:13.** பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்துக்கு உன்னை அனுப்புவேன் என்றார்.

**A. தாவீதின் முக்கியத்துவம் அதிகரித்தது.(16:1-17:58).**

*1. **தாவீதை சாமுவேல் அபிஷேகம் செய்தல்.**(16:1-13).*சவுலுடைய சிங்காசனத்தை நிரப்புவதற்காக சாமுவேல் பெத்தலகேமிற்கு அனுப்பபடுகின்றார். வீட்டில் தாவீது இல்லை தோற்றத்தின் படி எலியாசை பார்த்து இவன் தானா

என்று கேட்டார். கர்த்தர் இவன் இல்லை என்றார். இறுதியில் ஈசாயினுடைய இளையமகனாகிய தாவீது தெரிவு செய்யப்பட்டு , தனிப்பட்ட குடும்ப விழாவில் அபிஷேகம் பண்ணப்பட்டார்.

**கர்த்தருடைய ஆவி தாவீதின்மீது வந்தது.**-(16:13). தாவீது அனுபவித்த மூன்று விதமான அபிஷேகங்களில் இதுவே முதலாவது ஆகும். இரண்டாவது யூதாவின் மீது ராஜாவாக அபிஷேகம் செய்தலாகும் (2சாமு.2:4). மூன்றாவதாக முழு இஸ்ரவேல் மீதும் ராஜாவாக அபிஷேகம் பண்ணப்படுதலாகும்(5:3). இந்த முதலாவது அபஷேகத்தின் போது ஆவியானவர் கொடுக்கப்பட்டதன் நோக்கம், ஆளுகையைச் சிறப்பாக செய்வதற்கு அவரை வழி நடத்தவும் வேண்டியவற்றைக் கொடுக்க வுமாகும். இதைப் போலவே எங்களுக்கும் பரிசுத்த ஆவியானவர், எங்களை வழிநடத்தவும்,போதிக்கவும், தகுதிப்படுத்தவும் கொடுக்கப்பட்டுள்ளார். 16:6-7; 1நாள.12:7-11; 1 யோவ2:27).

2. ***தாவீது சவுலுக்கு முன்பாகப் பாட்டுப்பாடுதல்.****(16:14-23).*சவுல் தனது உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியாமற் போனதனால், தற்போது மன அழுத்தத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளார். (14-15).

தாவீது அவருக்கு உதவி செய்வதற்காக சிபார்சு செய்யப்பட்டு , வீணை வாசிப்பதற்காக கிபியாவிற்கு வந்துள்ளார். இது சவுலுக்குச் சிறிது ஆறுதலைக் கொடுத்த்து. (23).சவுலுடைய இராணுவத்தைப் போல் தாவீதிற்கும் கனமும் ,மரியாதையும் கொடுக்கப்பட்டது.

"தாவீது சுரமண்டலத்தை எடுத்து, தன்கையினால் வாசிப்பான்; அதினாலே பொல்லாத ஆவி அவனைவிட்டு நீங்க, சவுல் ஆறுதலடைந்து, சொஸ்த மாவான்"(16:22-23). சுரமண்டலம் வாசிக்கப்படும் போது ஆவிக்குரிய யுத்தம் இடம்பெறுவது விளக்குகிறது. தாவீது தன்னுடைய வாழ்க்கையிலும் சுரமண் டலம் வாசித்து துதிக்கும்போது ஆவிக்குரிய விடுதலை கிடைப்பதையும் ஆத்துமா ஆறுதல் பெறுவதாகவும் கூறுகின்றார். சங்கீதம். 32.

3. ***தாவீது கோலியாத்தை வெற்றி கொள்ளல்***.*(17:1-58).*

பெலிஸ்தர்கள் திரும்பவுமாய் இராணுவப் படையெடுப்புக்கு ஆயத்தமானா ர்கள். ஆனால் இப்பொழுது அவர்கள் இராட்சத வீரனை அனுப்பியுள்ளார்கள்.

கோலியாத் ஒன்பது அடி உயரமானவன் தனிச் சண்டைக்கு அறைகூவிக் கொண்டு நிற்கின்றான்.

தனிச் சண்டைசெய்வதற்குத் தாவீதிற்கு வயது போதாது. ஆனால் தனது சகோதரருக்கு வீட்டுச் சாப்பாடு கொடுப்பதற்காக வந்துள்ளார். (26). பாகால் தெய்வ வழிபாடு செய்பவர் "சேனைகளின் தேவனாகிய ஜீவனுள்ள தேவனை" நிந்திப்பதைக் கேட்டு அதிர்ச்சி அடைகிறான்.

தாவீது உணர்ச்சிவசப்படுவதை யாரோ அறிவித்ததன் பிரகாரம், தாவீது சாவுலுக்கு முன்பாக கொண்டுவரப்பட்டான். அங்கோ கோலியாத்துடன் யுத்தம் செய்வதற்கு தாவீது முன்வந்தான். தாவீதின் விசுவாசம் கர்த்தரில் உறுதிப்பட்டிருந்தது.அவன் தனது மந்தை மேய்க்கும் கல்லினால் இராட்சத னைச் சாகடித்தான். பெலிஸ்தீனியர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

> "நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்திலே உன்னிடத்தில் வருகிறேன். இன்றைய தினம் கர்த்தர் உன்னை என்கையில் ஒப்புக்கொடுப்பார்;"(17:38-51). நாங்களும் தாவீதைப் போல் எங்களுக்கு ஏற்படும் சகல பிரச்சனை களையும் கர்த்தர் மேலுள்ள பெரிதான விசுவாசத்தினாலும், நம்பிக்கை யினாலும் மேற்கொள்ளக் கற்றுக் கொள்ளல் வேண்டும்.தாவீது கவணை வீசுவதில் அனுபவமுள்ளவன், ஆனாலும் அவனது விசுவாசம் கர்த்தர் மீதுதான் இருந்தது, அவனை பல ஆபத்துக்களில் கர்த்தர் ஏற்கனவே காப்பாற்றி இருந்தார். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப்பற்றிக் கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணின வனுமாயிருக்கிறாய். (1தீமே 6:12)

**B.** சவுலுடைய அதிகாரங்கள் குறைந்து கொண்டே சென்றன.**(18:1-31:13).**

*1.* ***தாவீதின் மீது சவுல் குற்றம் சுமத்துதல்****(18:1-27:12).*தாவீதிற்கு இராணுவத் தகுதி கொடுக்கப்பட்டது. தாவீதினதும் யோனத்தானதும் நட்பு உண்மையும் உத்தமமுமானது தனக்கு வரவேண்டிய பதவி தாவீதுக்கு போகப்போகின்றது என்று தெரிந்தும் நேசித்தான். தசாப்தகாலங்களாய் தாவீது தனது வேலைகளை சிறப்பாகச் செய்துவந்தான்.(5). தாவீதிற்குக் கிடைக்கும் வெற்றிகளிலும் புகழ்ச்சிகளிலும் சவுல் பெறாமைப்பட்டு எரிச்சலடைந்தான்.(8-9). தாவீதோடு கர்த்தர் இருக்கிறார் என்பதைக்கண்டு சவுல் தாவீதிற்குப்

பயப்பட ஆரம்பித்தான். (12-16, 28-29). இவ்வகையான உணர்வுகள் பகையாக மாறத் தொடங்கியது, தாவீதின் மகளைத் திருமணம் முடித்தபடியால் சவுலுக்கு மருமகன் உறவாகவும் தாவீது மாறிவிட்டான், அப்படியிருந்து, தாவீதைக் கொலைசெய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் சவுல் இருந்தான். இதனால் பத்துவருடங்கள் சவுலோடு இருந்த தாவீது உயிருக்காக ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது. (19:14-21).

தாவீதும், சவுலின் மகனாகிய யோனத்தானும் நல்ல சிநேகிதர்களானார்கள். மீண்டும் கிபியாவிலே,யோனத்தானுக்கும் அவனது தகப்பனுக்கும் வாய்த் தர்க்கம் நடந்தது, அதனால் தாவீதுக்கு ஓர் எச்சரிக்கையை விடுத்தான். இருவருக்குமிடையில் கர்த்தரின் நாமத்தினால் உடன்படிக்கை ஏற்பட்டது ,அதாவது யார் உயிரோடு இருக்கிறாரோ அவர், மற்றவருடைய சந்ததியைக் காத்துக் கொள்ளவேண்டும் 20:42 தாவீதினுடைய பதவியில் பெரிய மாற்றம் ஏற்பட்டது. (21-30). பத்து வருடங்களாக மதிப்பிற்குரிய படை அதிகாரியாக விருந்தார், ஆனால் தற்போது உயிருக்கு பயந்து ஓடுபவராகவிருக்கின்றார்.

**தாவீதும் ஆசாரியர்களும்**.(21:1-9; 22:1-23).

தாவீது பசியுடனும், ஆயுதமில்லாமலும் நோப் என்னும் இடத்திலிருக்கிற தேவாலயத்திற்கு சென்றான். அங்கே அகிமெலேக் என்னும் ஆசாரியன் இருந்தார், அவர், தாவீது சவுலின் வேலையாக வந்துள்ளார் என எண்ணி, அவருக்கு உணவும், வாளும் கொடுத்தார். பிற்பாடு, ஏதோமியனாகிய தேவேக்கு ஆசாரியர் அகிமெலேக் தாவீதாகிய உமது எதிரிக்கு உதவி செய்துள்ளார் என்பதை சவுலுக்கு அறிவித்தான். முழுமையான சம்பவத்தை கூறவில்லை. எரிச்சலுற்ற சவுல் ஆசாரியர்களை அழைக்கிறான் வினாவுகிறான். அகிமேலேக்கு தெரியாமல் நடந்தது என்று சொன்ன போதிலும், அவனையும், மேலும் 85 வேறே ஆசாரியர்களையும், அவர்களது குடும்பத்துடன் கொண்று குவித்தான். வேலைக்காரர் கொலைசெய்ய சம்மதிக்கவில்லை, தேவேக்கே கொலை செய்கிறான். அபியத்தர் இச் சம்பவத்தை தாவீதிடம் கூறினார், இதற்கு நானே பொறுப்பு என தன்னை தானே நொந்து கொண்டார். சங்கீதம் 52,53ஆகியன இந்த துக்கமான அனுபவங்களை தாவீது பாடியுள்ளார்.

தாவீது காத் என்ற தேசத்திற்கு ஓடினார். (21:10-15). தாவீதுக்கு ஒரு மறைவான இடத்தைக் கண்டுகொள்ள முடியும் அல்லது நாட்டை விட்டு ஓடிவிடமுடியும். முதலில் தாவீது பெலஸ்ரியாவுக்குச் சென்றான், அங்கு

அவருக்கு மரியாதை கிடைத்தது. தன்னுடைய உயிருக்குப் பயந்து தாவீது பைத்தியம் போல் நடிக்கத் தொடங்கினார். சங்கீதம் 56ம், 34ம் இந்த அனுபவங்களை வெளிக் கொண்டுவருகின்றன.

**அதுல்லாம் கெபியில் தாவீது** (22:1-5).

பெத்தலகேம் வீட்டிலிருந்து 15மைல் துரத்திலுள்ள கெபியில் தாவீது மறைந்திருந்தான். அதை அவன் சகோதரரும் அவன் தகப்பன் வீட்டார் அனைவரும் கேட்டு, அங்கே அவனிடத்துக்குப் போனார்கள். ஒடுக்கப்பட்டவர்கள், கடன்பட்டவர்கள், முறுமுறுக்கிறவர்கள் யாவரும் அவனோடே கூடிக்கொண்டார்கள். சங்கீதம் 142 அவருடைய அனுபவங்களை கூறுகின்றன.

தாவீது கேகிலா நகரத்தைக் காப்பாற்றினான், ஆனாலும் காட்டிக் கொடுக்கப்பட்டான். சங்கீதம் 54 இல் இதன் அனுபவங்களை தாவீது பகிர்ந்து கொள்கிறார்.

தாவீது இரண்டுதரம் சவுலின் உயிரைக்காப்பாற்றினான்,(24:1-26:25). ஆனால் சவுல் தாவீதின் உயிரை எடுப்பதற்கு பிரயத்தனம் பண்ணிக் கொண்டேயிருந்தான். இரண்டு சந்தர்ப்பங்களில் தாவீதிற்கு சவுலைக் கொலை செய்யக்கூடிய சந்தர்ப்பங்கள் கிடைத்தன, ஆனால் தாவீது கொல்லவில்லை.. சவுலைக் கர்த்தர் ராஜாவாக்கினதால். கர்த்தரால் அபிஷேகம் செய்யப்பட்டவர் மேல் தாவீது தனது கையை உயர்த்த விரும்பவில்லை சவுலின் மீது கை போடக்கூடாது என்ற முடிவை எடுத்த போதிலும், அவருக்கு மிகுந்த உபத்திபவம் ஏற்பட்டது. இரண்டாம் தரம் சவுலை கொல்ல வாய்ப்பு கிடைத்த போது அபிசாயி தான் கொல்லப்போகிறேன் என்று சொன்ன போது தாவீது தடுத்து கர்த்தரே அவன் உயிரை எடுக்கட்டும் என்று சென்னார். 26:17-25 தாவீது சவுல் மறைவிலிருந்து சம்பாசனை, தாவீது தன்னை தெள்ளுப்பூச்சிக்கு ஒப்பிட்டு பேசுகிறார், சவுல் மனம் திரும்பி நீ பெரிய காரியம் செய்வாய் என சொல்லுகிறான். சங்கீதம் 57 இதை விளக்குகின்றது. 24:17-22 மனம்மாறி ஜதார்த்தமாக பேசினார் சவுல். இந்த மாற்றம் கொஞ்ச நாட்களே இருந்தது. 25:1 கடைசி நியாயதிபதியும் தீர்கதரிசியுமான சாமுவேல் மரணமடைகிறார். 25:2-35 நாபாலின் துணிகரமான பேச்சும் அபிகாயின் புத்திசாலித்தனமும்.

**தாவீதின் நம்பிக்கையற்ற நிலை**(27:1-12). தாவீது தன்னுடைய ஜனங்களை மீண்டும் பெலஸ்ரியாவிற்குக் கூட்டிச் சென்றான். அப்பொழுது ஆகீஸ்: அன்றைய தினம் சிக்லாகை அவனுக்குக் கொடுத்தான்; அதினிமித்தம் சிக்லாக் இந்நாள்வரைக்கும் யூதாவின் ராஜாக்களைச் சேர்ந்திருக்கிறது.

*2.* ***சவுல் ஆவிகளொடு பேசுகிறவர்களை சந்தித்தான்***. *(28:1-25).* பெலஸ்தினியர்கள் இஸ்ரவேலர்களுடன் யுத்தம் செய்ய ஆயத்தமானபோது, சவுலுக்கு உதவிகள் தேவைப்பட்டது.சாமுவேல் இறந்துவிட்டார். சவுல் ஆவிகளுடன் பேசுபவளிடம் சென்று இறந்துபோன தீர்க்கதரிசியை தொடர்பு கொள்வதற்கு அவளிடம் உதவி கேட்டான்.சாமுவேல் தோன்றிய போது அந்தப் பெண் அதிர்ச்சி அடைந்தாள்.(12-14). சாமுவேல் சவுலுடைய மூன்று மகன்மார்களும் சவுலும் யுத்தத்தில் கொல்லப்படுவார்கள் என்று கூறியது. இஸ்ரவேலர்கள் தோல்வியடைவார்கள் என்றும் கூறினான்.

*3.* ***பெலஸ்தினியர்களுடனும் அமலேக்கியர்களுடனும் தாவீதிற்கு ஏற்பட்ட முரண்பாடு*** *(29:1-30:31).* பெலஸ்தியர்களுக்கும் இஸ்ரவேலர்களுக்கும் யுத்தம் ஏற்பட்டது, மற்ற தேசத்திலிருப்பவர்கள் தாவீதை நம்பாமல் அவனையும் அவனோடு சேர்ந்தவர்களையும் திரும்பவும் சிக்லாக்கிற்கு அனுப்பினான். அங்கு அவர்கள் வந்த போது அவர்களுடைய மனைவிமார்களும் பிள்ளைக ளும் அமலேக்கியர்களால் கொள்ளையடிக்கப்பட்டு கொண்டு போககப்பட்டது தெரியவந்தது. தாவீது தொடர்ந்து சென்று யுத்தம் செய்து மனைவி பிள்ளைகளையும் மீட்டுவந்தான். (30:1-2). 30:11-25 வியாதிப்பட்ட எகிப்தியனை அமலேக்கியனை கைவிட்டுச் சென்றனர். தாவீது அவனுக்கு உதவினார், அவன் மூலம் கிடைத்த தகவலை வைத்தே தாவீது அமலேக்கியரை வென்றார்.

4. ***மரணம்*** (31:1-13). யுத்தத்தில் சவுல் எதிரியின் அம்புபட்டு காயப்பட்டான், உயிரோடு பிடிபடுவதைத் தடுக்கும் வண்ணமாக தன்னுடைய ஈட்டியின்மீது விழுந்து உயிரைவிட்டான். பதவியாசை தற்பெருமை கீழ்படியாமையினாலும் கிருபையை இழந்து இறுதியில் பரிதாபமாக மரித்தான். தேவ பிள்ளைகளே நீங்கள் தாவீதை பாருங்கள் அவரிடமிருக்கும் நல்ல குண நலங்களை பின்பற்றுங்கள்.

நன்றி கர்த்தாவே

திராணி

## உசாத்துணை நூல்கள்.

**WILLMINGTON’S BIBLE HANDBOOK** *by* **Harold L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**WILLMINGTON’S GUIDE TO THE BIBLE** *by* **Dr. H. L. Willmington TYNDALE HOUSE PUBLISHERS, INC. Wheaton, Illinois**

**THE BIBLE READER’S COMPANION** *By* **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**THE BIBLE READER’S COMPANION** *By* **Lawrence O. Richards VICTOR BOOKS A Division of Scripture Press Publications Inc. USA Canada England**

**NELSON’S COMPLETE BOOK OF BIBLE MAPS & CHARTS OLD AND NEW TESTAMENTS Revised and Updated Edition Thomas Nelson Publishers Nashville •Atlanta •London •Vancouver**

**TALK THRUTHE BIBLE** by **BRUCE WILKINSON** and **KENNETH BOA**

Youngblood, R. F., Bruce, F. F., Harrison, R. K., & Thomas Nelson Publishers. (1995). *Nelson's new illustrated Bible dictionary*. Rev. ed. of: Nelson's illustrated Bible dictionary.; Includes index. Nashville: T. Nelson

இலுமினாகோலட்,பேரண்ஸ் அன்ட் சேச்ஸ் எடிசன்